# கேகாலை நகர சபை,

## கேகாலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 15 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கேகாலை நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் வருடம் செப்தெம்பரிலிருந்து 2015 திசம்பர் வரை கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்திற்குரிய தகவல்களை நீதிமன்றத்திலிருந்து பெற்று அது தொடர்பாக கடன்பட்டோரின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்தரைக் கட்டண வருமானம் கணிப்பிடும் போது காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து உப அட்டவணை பெற்று வருமானம் கணிப்பிடப்படாததுடன் பெறப்பட்ட உப அட்டவணைப்

படி 2015 ஒக்டோபர் வரை கிடைக்க வேண்டிய ரூபா.9,631,667 ஆக இருந்தும் அதனை ரூபா.4,198,188 என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட சபைக்குரிய வாடி வீடு மற்றும் அதன் காணியின் பெறுமதி மூலதனமாக்கும் போது ரூபா.300,000 வினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் நன்கொடையாக நூல்நிலைங்களுக்கு கிடைக்கப் பெற்ற ரூபா. 39,428 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது பெறப்பட்ட கழிவு ரூபா. 73,014 வருமான செலவுக் கணக்கில் வருமானமாக காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 <u>இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதி ரூபா.27,143,225 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கையின் பிரகாரமும் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா.23,127,447 ஆகவும் இருந்தது அத்துடன் ரூபா. 4,015,778 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.3.3 <u>தொங்கல் கணக்கு</u>

2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு தொங்கல் கணக்கு செலவு மீதி ரூபா. 3,657 வினை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.4 <u>பெற வேண்டிய கணக்கு</u>

2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு 01 வருடம் பூர்த்தியான பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா. 7,986,863 ஆகும்.

1.3.5 கணக்காய்வு தொடர்பாக ஆதாரம் காணப்படாதது

ரூபா.13,402,537 பெறுமதியான 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக விபரமான உப அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 1646 பிரகாரம் பயணம் மேற்கொண்ட மாதத்தின் பின்வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வாகன ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த சுருக்கம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டியதாக இருந்தும் சபைக்குரிய எந்தவொறு வாகனம் தொடர்பாகவும் குறிப்பிட்ட நடவடிக்கை மேற்கொன்றிருக்கவில்லை.

1.3.7 அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்

மாகாண சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளாது சேவை ஒப்பந்த அடிப்படையில் 20 ஊழியர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

1.4 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 42,086,583 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 53,037,862 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 10,951,279 பின்னடைவைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 10,951,279 தொகை பின்னடைவுக்கு 03 வருமான விடயங்களின் வீழ்ச்சியும் 03 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 1.5 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

2016.12.31 இல் நிலுவை

| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 4,764 | 2,041 | 10,593 | 8,685 | 2,724 | 1,908 | 4,632 |
| ii | வாடகை | 3,167 | 612 | 45,956 | 45,419 | 2,554 | 537 | 3,091 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 81 | 59 | 759 | 754 | 22 | 5 | 27 |
| iv | ஏனைய வருமானம் | 4,492 | 1,805 | 17,243 | 14,315 | 2,687 | 2,929 | 5,616 |
| | மொத்தம் | 12,504 | 4,517 | 74,551 | 69,173 | 7,987 | 5,379 | 13,366 |

மேற்காட்டப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் படி மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுடன் ஒப்பிடும் போது 2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு முழு நிலுவை வருமானக் கணக்கில் காட்டப்பட்டிருந்த நிலுவையினை விட ரூபா.32,161,658 குறைவு அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 மதிப்பீட்டு வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டு வரி மற்றும் காணி வரி செலுத்தாதது தொடர்பாக அந்த வரியினை அறவிட வேண்டிய இடத்துக்குரிய உரிமையாளரின் சொத்துக்களை உடமையாக்கி விற்பனை செய்தவதன் மூலம் அல்லது பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தும்

மாதிரி சோதனையின் படி 46 காணி உரிமையாளர் மற்றும் மதிப்பீட்டு வரி / காணி வரி இடங்களுக்கு 05 வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாத ரூபா. 683,795 மதிப்பீட்டு வரி மற்றும் காணி வரி அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த வரிப்பணக் கட்டணம் அறவிடுவதற்காக 05 வருடத்திற்கு ஒரு முறை சொத்து மதிப்பீடு செய்யப்பட்டு அறவிட வேண்டியிருந்தும் 2001 ஆம் வருட மதிப்பீட்டின் பிரகாரம் வரிப்பணக் அறவிடுப்படுவதனால் சபைக்கு கிடைக்க வேண்டிய வரிப்பண வருமானம் சரியான முறையில் அறவிடப்படவில்லை.

2.3.3 <u>வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்</u>

நகர சபை பிரதேச எல்லையினுல் 2014 வருடம் முதல் நடாத்தி செல்லப்படுகின்ற வியாபார நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 22,000 வியாபார அனுமதிக் கட்டணம் அறவிட நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

2.3.4 <u>வேறு வருமானங்கள்</u>

(அ) <u>மலசல கூடக் கட்டணம்</u>

மலசல கூடக் கட்டணம் கணிப்பிடும் போது மீளாய்வாண்டிற்கு ரூபா. 3,000 அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டதுடன் பல வருடங்களாக இருந்து வரும் ரூபா. 55,801 நிலுவை மீதியினை கண்டறிந்தும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) <u>வாடி வீட்டுக் வாடகை</u>

2014 வருடம் முதல் நிலுவையாக இருக்கும் வாடி வீட்டுக் வாடகை ரூபா. 502,026 மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அறவிட்டு இருக்கவில்லை.

(இ) <u>வாரச் சந்தைக் கட்டணம்</u>

52 பழைய வாரச் சந்தைக் கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.1,532,780 வினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) <u>வழக்கறிஞர் காரியாலய தொகுதியின் வாடகை அறவிடாதது</u>

கேகாலை நகர சபை வழக்கறிஞர் காரியாலய தொகுதியில் ரூபா. 1,000 மாதாந்த வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் கடைகளுக்குரிய நிலுவை வாடகை ரூபா. 40,000 மற்றும் தண்டப் பணம் ரூபா. 71,500 வினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) <u>விளம்பர அறிவிப்புப் பலகை</u>

நகர சபை அதிகார எல்லைக்குல் விளம்பர அறிவிப்பு தொடர்பாக 2016 ஆம் வருடம் ஆய்வு மேற்கொன்றிருந்த போதிலும் 12 விளம்பரப் பலகை தெடர்பாக அறவிட வேண்டிய ரூபா.135,600 கட்டணம் அறவிடப்பட்டிருக்காதது பௌதீக பரிசோதனை மூலம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) <u>பஸ் தரிப்பிடக் கட்டணம்</u>

2011 வருடத்திற்கு முன்பிருந்து வீதிப் பயணிப் போக்குவரத்து அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 14,155 மற்றும் 2012 வருடம் முதல் 2016 திசம்பர் 31 ஆம் திகதி வரை அலவ்வ இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா.4,380 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 3.1 <u>செயற்திறன்</u>

ஒலகம நீச்சல் தடாக முதல் கட்ட நிர்மான நடவடிக்கைகளுக்காக 2011 வருடம் முதல் 2015 வருடம் வரை ரூபா. 8,865,977 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இரண்டாவது கட்ட வேலை ஆரம்பிக்கப்படாததனால் தடாகத்தை பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ள முடியாததன் காரணமாக செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்ற செலவாகக் காணப்பட்டது.

### 3.2 திடக் கழிவு முகாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர சபை அதிகார எல்லைக்குல் ஒரு நாளைக்கு சாதாரணமாக 15 அல்லது 20 டொன் அளவில் சேருகின்ற குப்பை கூலங்கள் மலைப் பல்லத்தாக்கு பகுதியொன்றில் போடப்பட்டு வருசின்றது.

(அ) மலக் கழிவு அகற்றுவதற்கு இடமில்லாததனால் மீளாய்வாண்டில் அந்த சேவையினை நகர சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 04 தொடர்பாக மொத்தம் ரூபா.5,026,000 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 20 தொடர்பாக நூற்றுக்கு 26 இருந்து 97 வரை பெறுமதியின் அடிப்படையில் ரூபா. 23,343,941 ஒதுக்கீடு சபை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை அத்துடன் 09 செலவுவிடயங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டினைவிட அதிகமாக ரூபா. 13,358,396 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | | அவதானிக்க வேண்டிய விடயம் |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | இயந்திரங்கள் தொடர்பாக உப அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை |
| | (ii) | நிலையான சொத்துக்கள் ஆய்வுக்குற்படுத்தப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | (i) | கணக்கு மீதி உப அட்டவணைகளுடன் இனங்காமை |
| | (ii) | களஞ்சிய கடன்பட்டோர் கணக்கு முறையாக நடாத்திச்செல்லப்படாமை. |
| (இ) கணக்கீடு | (i) | மிகை / பற்றாக்குறை ஒதுக்கீடு சரியான அதிகாரத்தின் மூலம் பதிவளிக்கப்படவில்லை. |
| (ஈ) கடன்பட்டோர்/கடன்கொடுத்தோர் | (i) | போதுமான பெறுமதி கவனத்திற் கொள்ளாததனால் மிகை/பற்றாக்குறை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) | வருமான கடன்பட்டோர் அறவிடப்பட்டிருக்கவில்லை. |